

சென்னை, வாலாஜா சாலையில் செயல்பட்டு வரும் சுற்றுலா வளாக கூட்டரங்கில் சுற்றுலாத்துறையின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டப்பணிகள் குறித்த சுற்றுலா அலுவலர்களுக்கான ஆய்வுக் கூட்டம் சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் தலைமையில் நேற்று (12.6.2024) நடைபெற்றது. இக்கூட்டத்தில் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கழகத் தலைவர் டாக்டர்.க.மணிவாசன், சுற்றுலா ஆணையர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் சி.சமயமூர்த்தி ஆகியோர் கலந்து கொண்டனர்.



இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமையில் நேற்று (12.06.2024) ஆணையர் அலுவலகத்தில், இந்து சமய அறநிலையத்துறை மானிய கோரிக்கையில் அறிவிக்கப்பட வேண்டிய புதிய அறிவிப்புகள் குறித்த கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க. மணிவாசன், இந்து சமய அறநிலையத்துறை சிறப்பு பணி அலுவலர் ஜெ.குமரகுருபரன், ஆணையர் க.வீ.முரளீதரன், கூடுதல் ஆணையர் அ.சங்கர் மற்றும் அலுவலர்கள் கலந்துக் கொண்டனர்.

### முதலமைச்சரின் சீரிய நடவடிக்கையில் - தமிழ்நாட்டில்

# சுற்றுலா பயணிகளின் வருகை தொடர்ந்து அதிகரிப்பு!

## அமைச்சர் கா.ராமச்சந்திரன் பேட்டி!

சென்னை,ஜூன்.13-

சென்னை, வாலாஜா சாலையில் செயல்பட்டு வரும் சுற்றுலா வளாக கூட்டரங்கில் சுற்றுலாத்துறையின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டப்பணிகள் குறித்த சுற்றுலா அலுவலர்களுக்கான ஆய்வுக் கூட்டம் சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் தலைமையில் நேற்று (12.6.2024) நடைபெற்றது. இக்கூட்டத்தில் பல்வேறு சுற்றுலா வளர்ச்சித்திட்ட பணிகள் குறித்து சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கழகத் தலைவர் டாக்டர்.க.மணிவாசன், சுற்றுலா ஆணையர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் சி.சமயமூர்த்தி ஆகியோர் முன்னிலையில் சுற்றுலாத்துறை அமைச்சர் ஆய்வு மேற்கொண்டார்.



இக்கூட்டத்தில் சுற்றுலாத்துறை அமைச்சர் கா. ராமச்சந்திரன் பேசுகையில் தெரிவித்ததாவது,

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நடவடிக்கைகளால் இந்தியாவிலேயே தமிழ்நாடு அதிக அளவில் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் முதன்மை சுற்றுலாத் தலமாக முன்னேறி உள்ளது. கொரோனாவிற்கு பிறகு 2021 ஆம் ஆண்டில் 57,622 ஆக இருந்த வெளிநாட்டு சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை 2022 ஆம் ஆண்டில் 4,07,139 ஆகவும், 2023 ஆம் ஆண்டில் 11,74,899 ஆகவும் உயர்ந்துள்ளது. தற்போது தமிழ்நாட்டிற்கு 2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் ஏப்ரல் மாதம் வரை 4,97,437 வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் வருகை தந்துள்ளார்கள்.

இதே போன்று உள்நாட்டு சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை 2021 ல் 11,53,36,719 ஆக இருந்து 2022 ல் 21,85,84,846 ஆகவும், 2023 ல் 28,60,11,515 என உயர்ந்துள்ளது. தற்போது தமிழ்நாட்டிற்கு 2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் ஏப்ரல் மாதம் வரை 10,14,94,849 உள்நாட்டு சுற்றுலா பயணிகள் வருகை தந்துள்ளார்கள்.

முதலமைச்சர் சுற்றுலாது துறைக்கு தொழில் அந்தஸ்தை வழங்கும் சுற்றுலா கொள்கையை வெளியிட்டுள்ளார்கள்.

தமிழ்நாட்டிற்கு ஆண்டு முழுவதும் அதிக சுற்றுலா பயணிகள் வருகை தரும் வகையில் முதலமைச்சர் பல்வேறு சுற்றுலா வளர்ச்சித்திட்டப் பணிகளை அறிவித்து செயல்படுத்தி வருகின்றார்கள். அதனடிப்படையில் கன்னியாகுமரியில் உள்ள அய்யன் திருவள்ளுவர் சிலையை இரவிலும் கண்டு மகிழும் வகையில் ரூ.11.98 கோடி மதிப்பீட்டில் லேசர் தொழில்நுட்ப உதவியுடன் ஒளியூட்டம் மேற்கொள்ளும் பணிகளும், தமிழ் பண்பாடு மற்றும் பாரம்பரிய சின்னமாக விளங்கிய துறைமுக நகரமான பூம்புகாரில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் கட்டப்பட்ட பூம்புகார் கலைக்கூடம் ரூ.23.60 கோடி மதிப்பீட்டில் புனரமைக்கும் பணிகளும், பிச்சாவரம் சுற்றுலாத்தலத்தினை ரூ.14.07 கோடி மதிப்பீட்டில் கூடுதல் வசதிகளுடன் மேம்படுத்தும் பணிகளும், தருமபுரி மாவட்டம் ஒகேனக்கல் சுற்றுலாத்தலத்தினை ரூ.17.57 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தும் பணிகளும் நடைபெற்று வருகின்றன.

கொல்லிமலையை பல்வேறு வசதிகளுடன் கூடிய முக்கிய சுற்றுலாத்தலமாக மாற்றும் பணிகள் ரூ.2.22 கோடி மதிப்பீட்டிலும், உதகை படகு குழாமில் ரூ.3.20 கோடி மதிப்பீட்டில் மரவீடுகள், மரத்தின் மேல் வீடுகள், குடில் வீடுகள் உள்ளிட்ட சுற்றுலா மேம்பாட்டு பணிகளும், ஜவ்வாது மலையில் ரூ.2.91 கோடி மதிப்பீட்டில் சுற்றுலா மேம்பாட்டு பணிகளும்,

ஏலகிரி மலையில் ரூ.2.98 கோடி மதிப்பீட்டில் சுற்றுலா மேம்பாட்டு பணிகளும், திருப்பூர் மாவட்டம் ஆண்டிபாளையம் ஏரியில் ரூ.1.47 கோடி மதிப்பீட்டில் படகு சவாரி உள்ளிட்ட வசதிகள் ஏற்படுத்தும் பணிகளும், தருமபுரி மாவட்டத்தில் உள்ள வத்தல் மலையில் ரூ.2.23 கோடி மதிப்பீட்டில் சாகச சுற்றுலா, திறந்த வெளி முகாம்கள் அமைத்தல் உள்ளிட்ட சுற்றுலா மேம்பாட்டு பணிகளும் நடைபெற்று வருகின்றன.

தென்னிந்தியாவின் ஸ்பா என்று அழைக்கப்படும் குற்றாலத்தை ரூ.11.34 கோடி மதிப்பீட்டில் நவீன வசதிகளுடன் மேம்படுத்தப்படுத்தும் பணிகளும், கன்னியாகுமரி மாவட்டம் முட்டம் கடற்கரை மற்றும் திற்பரப்பு நீர்வீழ்ச்சி ஆகிய சுற்றுலாத்தலங்களில் ரூ.7.09 கோடி மதிப்பீட்டில் சுற்றுலாத்தல மேம்பாட்டு பணிகளும், புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள முத்துக்குடா கடற்கரைப் பகுதியை ரூ.3.06 கோடி மதிப்பீட்டில் நீர் விளையாட்டுகள், கடற்கரை விளையாட்டுகள் மற்றும் அடிப்படை வசதிகள் கொண்ட சுற்றுலாத் தலமாக மேம்படுத்தப்படுத்தும் பணிகளும் உள்பட தமிழ்நாடு முழுவதும் சுற்றுலா வளர்ச்சித்திட்ட பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன.

முட்டுக்காடு படகு இல்லத்தில் ரூ.5 கோடி மதிப்பீட்டில் தனியார் மற்றும் பொது பங்களிப்பு திட்டத்தின் கீழ் 200 நபர்கள் அமரும் வகையிலான இரண்டு அடுக்குகள் கொண்ட மிதவை உணவக கப்பல் அமைக்கும் பணி முடிவடையும் நிலையில் உள்ளது.

சுற்றுலா வளர்ச்சித் திட்டப்பணிகளை குறித்த காலத்திற்குள் முடிவடைந்து மக்கள் பயன்பாட்டிற்கு வரும் வகையில் சுற்றுலா அலுவலர்கள் பணியாற்றிட வேண்டும். சுற்றுலா மேம்பாட்டுத் திட்டப்பணிகள், உலக சுற்றுலா பயணிகளின் விருப்பமான முக்கிய சுற்றுலாத்தலமாக தமிழ்நாட்டை உருவாக்கும் என்று சுற்றுலாத்துறை அமைச்சர் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் சுற்றுலாத்துறை உயர் அலுவலர்கள், மாவட்ட சுற்றுலா அலுவலர்கள், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக உயர் அலுவலர்கள், மண்டல மேலாளர்கள், உதவி செயற்பொறியாளர்கள் கலந்து கொண்டனர்.

### முத்தமிழறிஞர் கலைஞர் மீது அளவில்லா பற்று கொண்டவர்

# மன்னார்குடி சேப்பையன் (எ) ஆறுமுகம் மறைவு!

## கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஜூன் 13-

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் மீது அளவற்ற பற்று கொண்டவர் மன்னார்குடி சேப்பையன் என்கிற ஆறுமுகம். அவரது மறைவுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இரங்கல் தெரிவித்து செய்தி வெளியிட்டுள்ளார்.

கழகத் தலைவர் - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு :

**திருவாரூர் மாவட்டம் மன்னார்குடி நகரத்தைச் சேர்ந்த சேப்பையன் என்கிற எல்.ஆறுமுகம் அவர்கள் மறைவெய்திய செய்தியறிந்து வருத்தமுற்றேன்.**

**தலைவர் கலைஞர் அவர்கள் தஞ்சை சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட்ட போது, எதிரிகளின் தாக்குதல்களை முண்டாசு கட்டிக் கொண்டு தீரத்துடன் போராடி முறியடித்ததால், தலைவர் கலைஞர் அவர்களால் "முண்டாசு சேப்பையன்" என அழைக்கப்பட்டவர். தலைவர் கலைஞர் மீது அளவில்லா பற்றுக்கொண்டு இயங்கிய கழக முன்னோடியான இவரது மறைவுக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்வதோடு, அவரது பிரிவால் வாடும் அவரது குடும்பத்தினருக்கும், கழக உடன்பிறப்புகளுக்கும், நண்பர்களுக்கும் ஆறுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.**

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

### மகுடஞ்சாவடி ஊராட்சி ஒன்றியம் - அ.புதூரில்

# சாலை விபத்தில் உயிரிழந்தவர் குடும்பத்திற்கு ரூ.5 லட்சம் நிதி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

சென்னை, ஜூன் 13-

சேலம் மாவட்டம், மகுடஞ்சாவடி ஊராட்சி ஒன்றியம், அ.புதூர் ஊராட்சியில் நிகழ்ந்த சாலை விபத்தில் உயிரிழந்த தூய்மைப் பணியாளரின் குடும்பத்திற்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி அறிவித்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.

சேலம் மாவட்டம், மகுடஞ்சாவடி ஊராட்சி ஒன்றியம், அ.புதூர் ஊராட்சி, கந்தன்குட்டை செல்லும் வழியில் நேற்று (12.06.2024) தூய்மைப் பணியில் ஈடுபட்டிருந்த திருமதி. கோவிந்தம்மாள் (வயது 65) க/பெ. பச்சமுத்து, திருமதி. சின்னப்பொண்ணு (வயது 66) க/பெ.முத்துசாமி மற்றும் சிவலிங்கம் (வயது 47) த/பெ. செல்லமுத்து ஆகியோர் மீது அடையாளம் தெரியாத நபர் ஓட்டி வந்த இருசக்கர வாகனம் எதிர்பாரா தவிதமாக மோதிய விபத்தில் பலத்த காயமடைந்த திருமதி. கோவிந்தம்மாள் என்பவருக்கு மகுடஞ்சாவடி ஆரம்பச் சுகாதார நிலையத்தில் முதலுதவி அளிக்கப்பட்டு, மேல் சிகிச்சைக்காக தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்ற துயரமான செய்தியைக் கேட்டு மிகுந்த வேதனையடைந்தேன்.

மேலும், இவ்விபத்தில் காயமடைந்து சேலம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் திருமதி. சின்னப்பொண்ணு மற்றும் சிவலிங்கம் ஆகிய இருவருக்கும் சிறப்புச் சிகிச்சை அளிக்கவும் உத்தரவிட்டுள்ளேன்.

இந்த விபத்தில் உயிரிழந்த திருமதி. கோவிந்தம்மாள் அவர்களது குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு அவர்களது குடும்பத்திற்கு ஐந்து இலட்சம் ரூபாயும், இலேசான காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு தலா ஐம்பதாயிரம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிட உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

### அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமை! குன்றத்தூர் தெற்கு ஒன்றியத்தில்

# கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு - வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிக்கிறார்!

## கு.செல்வப்பெருந்தகை எம்.எல்.ஏ. முன்னிலை! படப்பை ஆ.மனோகரன் அறிக்கை!

காஞ்சிபுரம், ஜூன் 13-

குன்றத்தூர் தெற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் - காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் படப்பை ஆ.மனோகரன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் குன்றத்தூர் தெற்கு ஒன்றியத்தில் திருபெரும்புதூர் நாடாளுமன்ற தொகுதியின் இந்தியா கூட்டணியின் திமுக நாடாளுமன்ற உறுப்பினர், கழக பொருளாளர் டி.ஆர். பாலு பொதுமக்களுக்கு நன்றி தெரிவிக்கும் சுற்றுப்பயணம் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக செயலாளர் - சிறு குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் தலைமையில் திருபெரும்புதூர் சட்டமன்ற உறுப்பினர் கு.செல்வபெருந்தகை முன்னிலையில் ஊராட்சி வாரியாக நடைபெறுகிறது.

இன்று (13.6.2018 வியாழக்கிழமை) காலை 7.00 மணி அளவில் திருமுடிவாக்கம் ஊராட்சியிலும், காலை 7.15 மணியளவில் பழந்தண்டலம் ஊராட்சியிலும், காலை 7.30 மணியளவில் எருமையூர் ஊராட்சியிலும், காலை 8.00 வரதராஜபுரம் ஊராட்சியிலும்,

காலை 8.15 மணியளவில் மணிமங்கலம் ஊராட்சியிலும், காலை 8.30 மணியளவில் சேத்துப்பட்டு ஊராட்சியிலும், காலை 8.45 மணியளவில் மலைபட்டு ஊராட்சியிலும், காலை 9.00 மணியளவில் படப்பை ஊராட்சியிலும், காலை 9.30 மணியளவில் கரசங்கால் ஊராட்சியிலும், காலை 9.45 மணியளவில் ஆதனூர் ஊராட்சியிலும், காலை 10.00 மணியளவில் மாடம்பாக்கம் ஊராட்சியிலும், காலை 10.15 மணியளவில் காவனூர் ஊராட்சியிலும், காலை 10.30 மணியளவில் ஒரத்தூர் ஊராட்சியிலும், மாலை 4.00 மணியளவில் சாலமங்கலம் ஊராட்சியிலும், மாலை 4.15 மணியளவில் வைப்பூர் ஊராட்சி வஞ்சுவாஞ்சேரி பகுதியிலும், மாலை 4.30 மணியளவில் செரப்பனஞ்சேரி ஊராட்சியிலும், மாலை 4.45 மணியளவில் வட்டம்பாக்கம் ஊராட்சி காஞ்சிவாக்கம் பகுதியிலும், மாலை 5.00 மணியளவில் நாட்டரசன் பட்டு ஊராட்சியிலும், மாலை 5.30 மணியளவில் வளையக்கரனை ஊராட்சியிலும், மாலை 6.00 மணியளவில் வடக்கு பட்டு ஊராட்சியிலும்,

மாலை 6.15 மணியளவில் எழுச்சூர் ஊராட்சியிலும், மாலை 6.30 மணியளவில் சென்னகுப்பம் ஊராட்சியிலும் கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு நன்றி தெரிவிக்க வருகை தருகிறார்.

அது சமயம் இந்தியா கூட்டணி கட்சி நிர்வாகிகள் அனைவரும் திரளாக இந்நிகழ்ச்சியில் பங்கேற்று நிகழ்ச்சியை சிறப்பாக நடத்தி தந்திட வேண்டுமாய் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### தென்மேற்கு பருவமழையினை முன்னிட்டு - சென்னை மாநகராட்சி பகுதிகளில்

# முன்னெச்சரிக்கைப் பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம்!

## மேயர் ஆர்.பிரியா தலைமையில் நடைபெற்றது!

சென்னை, ஜூன் 13-

மேயர் திருமதி ஆர். பிரியா தலைமையில், பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் தென்மேற்குப் பருவ மழையினை முன்னிட்டு மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள், வளர்ச்சித் திட்டப்பணிகள் மற்றும் பொது சுகாதாரத் துறையின் நோய்த் தடுப்பு நடவடிக்கைகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நேற்று முன்தினம் (11.06.2024) ரிப்பன் கட்டட வளாகக் கூட்டரங்கில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மேயர் பேசும்போது தெரிவித்ததாவது:

பெருநகர சென்னை மாநகராட்சியில் தென்மேற்குப் பருவமழையினை முன்னிட்டு மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைத் தீவிரமாக மேற்கொள்ள வேண்டும். மழைநீர் வடிகால்கள் மற்றும் நீர் நிலைகளைத் தூர்வாரும் பணிகள் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டும். பெருநகர சென்னை மாநகராட்சியில் மேற்கொள்ளப்பட்டு வரும் அனைத்து வளர்ச்சி திட்டப் பணிகளையும் மேலும் தீவிரப்படுத்தி தரமாகவும் விரைவாகவும் முடித்து மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும்.

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொசு ஒழிப்புபணிகளை மேற்கொள்ள 2174 சிறுவட்டங்களாக பிரிக்கப்பட்டு 908 கொசு ஒழிப்பு நிரந்தரபணியாளர்கள், 2,406 ஒப்பந்தப்பணியாளர்கள் என மொத்தம் 3,278 பணியாளர்கள் மூலம் கொசு ஒழிப்புபணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், 323 மருந்து தெளிப்பான்கள், 54 பவர்ஸ்ப்ரேயர்கள், பேட்டரி மூலம் இயங்கும் 156 ஸ்ப்ரேயர்கள், 225 கையினால் இயங்கும் புகைப்பரப்பும் இயந்திரங்கள், 2 சிறிய புகைப்பரப்பும் இயந்தி ரங்கள் மற்றும் 65 வாகனங்களில் பொருத்தப்பட்ட புகைப்பரப்பும் இயந்திரங்கள் கொண்டு கொசுக்களை கட்டுப்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணிகளை சிறப்பாக மேற்கொள்ள வேண்டும்.

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மழைநீர் வடிகால்களில் கொசுப் புழுக்களை அழிக்க ஒரு வார்டிற்கு கொசு மருந்து தெளிப்பான்களுடன் இரண்டு நபர்கள்என 200 வார்டுகளுக்கும் 400 நபர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர். ஒரு இடத்தில் வாரத்திற்கு ஒரு முறை கண்டிப்பாக மருந்து தெளிக்கப்பட வேண்டும். 293.75கி.மீ. நீர் வழித்தடங்களில் கொசு மருந்து தெளிக்க 128 பணியாளர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர். பெருநககர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட குடிசைப்பகுதிகள், பூங்காக்கள் மற்றும் சாலைகள் ஆகிய பகுதிகளில் புகைப்பரப்பும் இயந்திரங்கள் கொண்டு வளர்ந்த கொசுக்கள் அழிக்கப்பட்டு வருகின்றன.

பெருநகர சென்னை மாநகராட்சியில் மருத்துவமனைகளில் போதிய மருந்துகள் இருப்பில் உள்ளதை உறுதி செய்வதோடு மருத்துவர்கள், பணியாளர்கள் சிறப்பாக பணியாற்றி மக்களுக்கு சிறப்பான மருத்துவ சேவை வழங்கிட வேண்டும் என்று மேயர் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் துணை மேயர் மு.மகேஷ்குமார், கூடுதல் தலைமைச் செயலாளர்/ ஆணையாளர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன், வட்டார துணை ஆணையாளர்கள் கே.ஜெ.பிரவீன் குமார் (மத்தியம்), கட்டா ரவி தேஜா, (வடக்கு), நிலைக்குழுத் தலைவர் (பொதுசுகாதாரம்) டாக்டர் கோ. சாந்தகுமாரி, தலைமைப் பொறியாளர் (பொது) எஸ்.ராஜேந்திரன், மாநகர நல அலுவலர் டாக்டர் எம். ஜெகதீசன், மாநகர மருத்துவ அலுவலர் டாக்டர் பானுமதி மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் திருப்போரூர் பேரூர் கழகம் சார்பில் பேரூர் கழக செயலாளர் மு.தேவராஜ் ஏற்பாட்டில் முத்தமிழறிஞர் கலைஞரின் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து கேக் வெட்டி பிறந்தநாள் கொண்டாடப்பட்டு உணவு வழங்கப்பட்டது. இதில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எஸ். ஆர்.எல்.இதயவர்மன் தலைமை செயற்குழு உறுப்பினர் ஜி.சி.அன்பு செழியன் பேரூர் கழக நிர்வாகிகள் எஸ். அஸ்கர் அலி, வி. சந்திரன், ஆர்.பரசுராமன், ஜி.பலராமன், மு.க.ரவி, டி.டி.சேகர், ஒய். மோகன், வி.வீரா, குமரன், டி.செங்குட்டுவன், பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் வார்டு செயலாளர் இளைஞர் அணி மாணவர் அணி மகளிர் அணி மற்றும் கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.



தாம்பரம் வட்டாட்சியர் அலுவலகத்தில் வருவாய்த்தீர்வாயம்1433ஆம் பசலி ஆண்டு வருவாய் தீர்வாயம் ஜமாபந்தி தீர்வாய அலுவலர் ஜோதிசங்கர் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் தாம்பரம் மாநகர செயலாளர், எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. கலந்து கொண்டு பொதுமக்களிடம் கோரிக்கைகளை பெற்றுக் கொண்டார். இதில் தாம்பரம் மாநகராட்சி மண்டல குழு தலைவர்கள் டி.காமராஜ் , எஸ்.இந்திரன், மாமன்ற உறுப்பினர்கள் செ.சுரேஷ், பி.ஜோதிகுமார், வட்டாட்சியர் நடராஜன், துணை வட்டாட்சியர் ஸ்ரீதர், வருவாய் அலுவலர் வேம்பு , கிராம நிர்வாகி அலுவலர் இளவரசன், பகுதி கழக நிர்வாகிகள், கழக நிர்வாகிகள், பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டனர் .